(ஆ) காஞ்சீபுரம் வீட்டு வசதி வாரியத்தின் வாயிலாக வீட்டு வசதி திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நேரடியாக நிலம் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்ட நிலம் கையகப்படுத்தும்போது சாதாரணமாக வீடுகள் கட்டுவதற்கு அதிக நிலம் தேவைப்படும். காஞ்சீபுரம் போன்ற நகரங்களில் நிலம் மதிப்பு அதிகமாக உள்ளதால் நிலம் கையகப்படுத்தும்போது அதற்கு அதிகச் செலவு அரசுக்கு ஏற்படும். அதைத் தவிர்க்க சென்னையைப் போன்று அடுக்கு மாடி வீடுகள் கட்டும் திட்டத்தை அமல்படுத்தினால் நல்லது. எனவே அரசு பரிசீலிக்குமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சீபுரத்திலேகூட சென்னையைப் போன்றுதான் அடுக்குமாடி வீடுகள் திட்டம் செயல்பட்டிருக்கிறது. அதாவது சென்னையிலே அடித்தளம் மற்றும் 3 அடுக்குகள் கொண்ட வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அதே போலத்தான் காஞ்சீபுரத்திலும் அடித்தளம் மற்றும் 3 அடுக்குகளைக் கொண்ட வீடுகள் கட்டப்படுகின்றன, வாரியத்தின் வாயிலாக. ஆகவே நிலம் கையகப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் இத்திட்டம் கூடிய விரைவில் எடுத்துக் கொள்ளப்படும். காஞ்சீபுரத்தைப் பொறுத்த வரை காஞ்சீபுரம் மட்டுமல்லாமல் பல்வேறு மாவட்டங்களிலும் சரி, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களிலேயும் சரி, மக்கள் தனியான வீடுகளை விரும்புகிறார்களேயொழிய அடுக்கு மாடி வீடுகளை அதிகமாக விரும்பாத காரணத்தினால், இது தற்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. மக்களுடைய தேவையைக் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 198, திருமதி கவிநிலவு தர்மராஜ், இருக்கையில் இல்லை. திருமதி கற்பகம் இளங்கோ அவர்கள் சார்பில் கேட்கலாம்.

198—

உடல் ஊனமுற்றோருக்குப் பேருந்துகளில் கட்டணச் சலுகை அளித்தல்.

* 13857—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 மார்ச் 31]

உடல் ஊனமுற்றவர்களுக்கு பேருந்துகளில் பயணம் செய்யும்போது கட்டணச் சலுகை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இலவசப் பயண பேருந்து சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களின் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு சலுகைகளை அளித்து வரும் நமது டாக்டர் முதல்வர் அவர்கள் இந்த உடல் ஊனமுற்றவர்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்கு கட்டணச் சலுகை அளித்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அது எப்போதிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வர் பொறுப்பை ஏற்றவுடன் முதல் பட்ஜெட் தொடர் கூட்டத்திலே உடல் ஊனமுற்றவர்கள், காது கேளாதோர் ஆகியவர்களுக்கு 15 வயதிலே இருந்ததை 20 வயது வரையாக நீட்டித்து மருத்துவமனை, கல்விக்கூடம், பயிற்சி நிலையம் போன்ற இடங்களுக்குச் சென்று திரும்பி வர அரசு பேருந்துகளில் இலவச பஸ் பாஸ் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, கண் பார்வையற்றோர், மன வளர்ச்சி குன்றியவர்கள், ஆகியோர் மருத்துவமனை, கல்விக்கூடம், பள்ளி, பயிற்சி நிலையம், பணியிடங்கள் போன்ற இடங்களுக்குச் சென்று திரும்பிவர அரசு பேருந்துகளில் இலவச பஸ் பாஸ் சலுகை அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு நலம் கொடுப்பதில் பல விருதுகளைப் பெற்றிருக்கின்ற நம்முடைய டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியிலே இந்த உடல் ஊனமுற்றவர்கள், சலுகை கேட்டு விண்ணப்பம் செய்பவர்கள் அனைவருக்கும் இந்த சலுகை கொடுக்கப்படுகிறதா அல்லது அதற்காக என்று சில 'நார்ம்ஸ்' வைத்து இத்தனை பர்சென்டேஜ் உடல் ஊனம் இருந்தால் தான் கொடுக்கப்படும் என்று ஒரு கன்டிஷன் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் 50 சதவிகிதத்திற்குமேல் உடல் ஊனமுற்று இருந்தால் அவர்களுக்கு 20 வயதுவரை பஸ் பாஸ் இலவசமாக வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய உடல் ஊனமுற்றவர்களுக்கு பயன்படும் வகையில் போக்குவரத்துக் கழகங்களில் அனைத்து உடல் ஊனமுற்றவர்களுக்கும் வயது வரம்பு இன்றி இலவச பஸ் பாஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா, பஸ் பாஸ் வெகு எளிதில் அவர்கள் பெற ஆவன செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து உடல் ஊன முற்றவர்களும் பயன் பெறக்கூடிய வகையில் பஸ் சலுகையை வழங்க வேண்டுமென்று சமூக நலத்துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் சமூக நலத்துறை, போக்கு வரத்துக் கழகங்களுக்கு, இந்த பஸ் பாசுக்கு உரிய கட்டணங் களை இலாகாவிலேயிருந்து வழங்கி வருகிறது. அரசு போக்கு வரத்துக் கழகப் பேருந்துகள் ஊனமுற்றவர்கள் பயணம் செய்தாலும் அந்த பஸ்கள் ஓடுகின்றன என்கிற காரணத்தினால் ஊனமுற்றவர்களுக்கு சலுகைக் கொடுப்பதால் போக்குவரத்துக் கழகங்களுக்கு கொடுக்க வேண்டிய அனைத்து நிதியையும் சமூக நலத் துறையே ஒதுக்க வேண்டி இருப்ப தாலும் இந்த விஷயத்தை நன்கு ஆராய்ந்த பிறகு, பரிசீலித்த பின்பே ஒரு முடிவை சமூக நலத் துறை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 199, திரு. தே. ஜனார்தனன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.